**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:12.01.2024

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மூலக்கூறு மாதிரியாக்கம் இணைத்தல் மற்றும் உருவகப்படுத்துதலுக்கான செயல்சார் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மைய இயக்குநரகத்தின் கீழ் இயங்கி வரும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தகவல் துறையின் மூலம் மூலக்கூறு மாதிரியாக்கம் இணைத்தல் மற்றும் உருவகப்படுத்துதலுக்கான நான்கு நாள் செயல்சார் பயிற்சியானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 முதல் 11ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களான மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் புதுச்சேரி, PI இண்டஸ்ட்ரீஸ், ராஜஸ்தான், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ICAR - மத்திய மீன்வளக் கல்வி நிறுவனம், VELS பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், ICAR - கரும்பு இனப்பெருக்க நிறுவனம், செயின்ட் ஜான்ஸ் கல்லூரி, பாளையங்கோட்டை மற்றும் TNAU (உயிர் தொழில்நுட்பம், நோயியல், நூற்புழுவியல் மற்றும் தோட்டக்கலைத்துறை) மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

இப்பயிற்சியானது, ஜனவரி 8 ஆம் தேதி இயக்குநர் (தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம்) மற்றும் விதை மையத்தின் இயக்குநர் முன்னிலையில் துவங்கப்பட்டது. செயல் சார் செய்முறை பயிற்சியானது தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தகவல் துறையின் பேராசிரியர்கள் மற்றும் பெங்களூரு ஆல்டெம் டெக்னாலஜியை சார்ந்த விஞ்ஞானி முனைவர்.S.திவ்யா அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டது. இப்பயிற்சியில் பல்வேறு வகையான முக்கிய மென்பொருட்களான டிஸ்கவரி ஸ்டுடியோ, மற்றும் மூலக்கூறு மாதிரியாக்கம், இணைத்தல் மற்றும் உருவகப்படுதலுக்கான இணையவழி மென்பொருட்களை உபயோகிக்கும் முறைகள் கற்றுக்கொடுக்கப்பட்டது. இதன்மூலம் பல்வேறு முடிவுகள் மற்றும் தரவுகளை மெய்நிகர் காட்சிப்படுத்துதலுக்கு உபயோகித்து பயனடையலாம்.

இப்பயிற்சியானது 11.01.2024 அன்று நிறைவுற்றது. நிறைவு விழாவில் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தகவல் துறையின் தலைவர் முனைவர்.ஏ.ஜான் ஜோயல் அனைவரையும் வரவேற்றார். அதனை தொடர்ந்து இச்செயல்சார் பயிற்சிக்கான அறிக்கையானது முனைவர் சூ.பாரதி (உதவி பேராசிரியர்) அவர்களால் வாசிக்கப்பட்டது. இவ்விழாவில் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் தாவர தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் மற்றும் முதன்மையர் (முதுநிலை) முனைவர் ந.செந்தில் தலைமையேற்று பயிற்சிக்கான சான்றிதழ்களை வழங்கினார். அதனை தொடர்ந்து பயனாளர்களிடம் இப்பயிற்சிக்கான கருத்துக்கள் சேகரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இறுதியாக முனைவர். சூ.சரண்யா(உதவி பேராசிரியர்) நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**